உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 07.06.2026 • மலர் 04 • இதழ்: 158 • ஞாயிற்றுக்கிழமை • Edition : Nagercoil • 07.06.2026 • Vol : 04 • Issue : 158 • Page : 4 • Rs. 5/-

# பொருளாதார நிபுணர்களுடன் ஆலோசனை

## பிரதமர் நரேந்திர மோடி அறிவிப்பு



புதுடெல்லி,ஜூன் 7
அமெரிக்கா ஈரான் போரால் சர்வதேச அளவில் எரிசக்தி நெருக்கடி ஏற்பட்டுள்ளது. உலகின் 20 சதவீத எண்ணெய் வர்த்தகம் நடைபெறும் முக்கிய கப்பல் வழித்தடமாக உள்ள ஹார்முஸ் ஜலசந்தியில் போக்குவரத்தை ஈரான் கட்டுப்படுத்தியுள்ளது. இதனால், எரிபொருள் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. பல்வேறு நாடுகளிலும் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், இந்தியாவிலும் பெட்ரோல், டீசல் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

கடந்த சில நாட்களில் மட்டும் கிட்டத்தட்ட 8 ரூபாய் அளவுக்கு எரிபொருள் விலை உயர்ந்துள்ளது. பெட்ரோல், டீசல் விலை உயர்வால் பிற பொருட்களின் விலையும் உயரத் தொடங்கியுள்ளது. இது நாட்டு மக்களுக்கு பெரும் சுமையாக மாறியுள்ள நிலையில், நெருக்கடியை சமாளித்து மீண்டு வர மத்திய அரசுபல்வேறு ஆலோசனைகளை மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில், பிரதமர் மோடி இன்று பொருளாதார கவுன்சிலில் உள்ள நிபுணர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார். இந்தக் கூட்டத்தில் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை வலுப்படுத்துதல், சர்வதேச சந்தைகளில் நிலவும் மாற்றங்களை எதிர்கொள்ளுதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் குறித்து முக்கிய ஆலோசனை நடத்தப்பட்டது.

## 'தி.மு.க.வை குறை சொல்வதற்கு நீங்கள் எதற்கு ஆட்சியில் இருக்கிறீர்கள்?' மேயர் பிரியா பேச்சு



சென்னை, ஜூன் 7
தமிழக முன்னாள் முதல் அமைச்சர் கருணாநிதியின் பிறந்தநாளையொட்டி, சென்னையில் தி.மு.க. சார்பில் தூய்மை பணியாளர்களுக்கான நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. இந்த விழாவில் முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு, சட்டமன்ற உறுப்பினர் சேகர்பாபு, மாநகராட்சி மேயர் பிரியா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்த விழாவில் மேயர் பிரியா பேசியதாவது;

"கடந்த 5 ஆண்டுகளில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் கருணாநிதி, தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின், தி.மு.க. இளைஞரணி தலைவர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்டோரின் பிறந்தநாள் விழாக்களின்போது தூய்மை பணியாளர்களுக்கான நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாக்கள் நடைபெறும். ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் தி.மு.க. என்றும் தூய்மை பணியாளர்களுடன் இருக்கும் என்பதற்கான உதாரணம்தான் இந்த நிகழ்ச்சி.

தமிழகத்தில் இன்று பொய்யான வாக்குறுதிகளை கொடுத்து ஒரு கூட்டம் ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் தற்குறி கூட்டம், கவர்ச்சியால் வெற்றி பெற்றார்கள் என்று சொல்கிறார்கள். வேறு எதை வைத்து அவர்கள் வெற்றி பெற்றார்கள்? வேறு என்ன களப்பணியை அவர்கள் செய்திருக்கிறார்கள்?

முதல் முறையாக ஆட்சியை அமைத்திருக்கிறார்கள். அவர்கள்தான் இப்போது ஆட்சியில் இருக்கிறார்கள் என்பது தெரியாமல், இன்றைக்கும் தி.மு.க.வை தொடர்ந்து குறை சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். ஆட்சி அமைத்து இத்தனை நாட்கள் ஆகியும் எந்த அமைச்சரும், சட்டமன்ற உறுப்பினரும் பொறுப்புணர்வுடன் செயல்படவில்லை.

கடந்த முறை தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தமிழக முதல்அமைச்சராக ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, கொரோனா காலகட்டத்தில் கூட மருத்துவமனைக்கு நேரில் சென்று பொறுப்புடன், அக்கறையுடன் செயல்பட்டார். ஆனால் இன்று ஆட்சி அமைத்துவிட்டு, அவர்களின் அமைச்சர்கள் எல்லா துறைகளிலும் இருந்தாலும் கூட, அனைத்திற்கும் தி.மு.க. மீது பழி போடுகிறார்கள்.

தி.மு.க.வை குறை சொல்வதற்கு நீங்கள் எதற்கு ஆட்சியில் இருக்கிறீர்கள்? எதற்காக அதிகாரத்தை கையில் வைத்திருக்கிறீர்கள்? ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் தி.மு.க. என்றும் மக்களுடன் இருக்கும், மக்களும் தி.மு.க.வுடன் இருப்பார்கள்."

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதல் 9 பேர் பலி



பெரூட், ஜூன் 7
ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் இணைந்து கடந்த பிப்ரவரி 28ம் தேதி தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலை தொடர்ந்து இஸ்ரேல், அரபு நாடுகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது. இந்த மோதலால் மத்திய கிழக்கில் பதற்றமான சூழ்நிலை நிலவியது. அதேவேளை, இந்த மோதலில் ஈரானுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் லெபனானில் செயல்பட்டு வரும் ஹிஸ்புல்லா ஆயுதக்குழுவினர் இஸ்ரேல் மீது தாக்குதலை தொடங்கினர்.

இதனால், இஸ்ரேல் ஹிஸ்புல்லா ஆயுதக்குழுவினர் இடையே மோதல் ஏற்பட்டது. லெபனானில் செயல்பட்டு வரும் ஹிஸ்புல்லா ஆயுதக்குழுவினர், ஹிஸ்புல்லாவின் ஆயுதக்கிடங்குகள், கட்டுப்பாட்டு மையங்களைகுறிவைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. ஹிஸ்புல்லா ஆயுதக்குழுவினரும் இஸ்ரேல் மீது அவ்வப்போது டிரோன்கள், ஏவுகணைகளை ஏவி தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், லெபனானின் நபியத், சக்சக்யா பகுதிகள் மீது இஸ்ரேல் இன்று அதிரடி வான்வழி தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் லெபனான் ராணுவ அதிகாரி உள்பட 9 பேர் உயிரிழந்தனர்.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 - 70102 64701

## அ.தி.மு.க. எடுத்த முடிவுகள் திருப்தி அளிக்கவில்லை

### உடுமலை ராதாகிருஷ்ணன் பேச்சு

சென்னை, ஜூன் 7
த.வெ.க.வில் இணைந்த முன்னாள் அமைச்சர் உடுமலை ராதாகிருஷ்ணன் பேசியதாவது:

"அ.தி.மு.க.வில் சாதாரண தொண்டர்களாக இருந்து, புரட்சித் தலைவி ஜெயலலிதாவால் எம்.எல்.ஏ.க்களாகவும், அமைச்சர்களாகவும் உயர்த்தப்பட்ட நாங்கள், இன்று த.வெ.க. தலைவர் விஜய்யின் தலைமையை ஏற்று அக்கட்சியில் இணைந்துள்ளோம்.புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆரையும், புரட்சித் தலைவி ஜெயலலிதாவையும் பார்த்தது போலவே விஜய்யையும் பார்க்கிறோம். அரசியல் ரீதியாக திசை தெரியாமல் இருந்த நாங்கள், தற்போது த.வெ.க.வில் இணைந்துள்ளோம்.

தேர்தல் முடிவுகள் வெளியான பிறகு அ.தி.மு.க. தலைமை எடுத்த சில முடிவுகள் எங்களுக்கு திருப்தி அளிக்கவில்லை. அந்த முடிவுகள் என்ன என்பது குறித்து வெளியில் பேச நாங்கள் விரும்பவில்லை. ஜெயலலிதா தொடங்கிய அம்மா உணவகத்தை, தற்போது தமிழக அரசு சீரமைத்து மீண்டும் சிறப்பாக செயல்படச் செய்துள்ளது. வரவிருக்கும் உள்ளாட்சித் தேர்தலில், அனைத்து தொகுதிகளிலும் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களுடன் இணைந்து பணியாற்றிவெற்றிபெறுவதற்காகநாங்கள்அனைவரும் ஒருங்கிணைந்து உழைப்போம்" என்றார்.

கடம்பூர் ராஜு பேசுகையில், "2011 சட்டமன்றத் தேர்தலின்போது எங்களுக்கு உறுதுணையாக இருந்தது விஜய் நற்பணி மன்றம். அப்போது இருந்த ஆதரவு இன்றும் தொடர்கிறது . தமிழக அரசியலில் புதிய மாற்றத்தை உருவாக்கும் நோக்கில் தவெகவில் இணைந்ததாகவும் அவர் கூறினார்.

## அரசியல் என்பது தேர்தலுக்காக மட்டுமல்ல சேவைக்காகவும் தான்

### தமிழிசை சவுந்தரராஜன் பேட்டி

மயிலாப்பூர், ஜூன் 7
2026சட்டமன்றதேர்தலில்பாஜகசார்பில்மயிலாப்பூர் தொகுதில் போட்டியிட்ட தமிழிசை சவுந்தரராஜன். அந்த தேர்தலில் 33,400 வாக்குகள் பெற்றுள்ளார். இந்த நிலையில் மயிலாப்பூர் தொகுதி மக்களுக்கு தமிழிசை சவுந்தரராஜன் நன்றி தெரிவிப்பில் கூறியதாவது:

மயிலாப்பூர் என்றவுடன் அது கோவிலும் அதை சார்ந்த இடமுமாகத்தான் இருக்கும் என்றும், இங்கு வசிக்கும் மக்கள் அனைவரும் பல அடுக்குமாடி குடியிருப்புகளில் சொகுசாக வாழ்பவர்கள் என்றும் பலர் நினைக்கிறார்கள். ஆனால், இங்குள்ள மக்களில் 60 சதவீதத்திற்கும் அதிகமானோர் விளிம்பு நிலையில் வாழ்பவர்கள் ஆவர். தேர்தலின்போது நான் இந்த பகுதியில் சுற்றுப்பயணம் செய்தபோது மக்களிடம் அடிக்கடி கூறியது என்னவென்றால், 'இங்கு நான் வெறும் தேர்தல் பிரச்சாரத்திற்காக மட்டும் வரவில்லை, உங்களின் நீண்டகால பிரச்சினைகளை கேட்டறிந்து, அவற்றை குறித்துக் கொள்வதற்காகவும் வந்துள்ளேன்.

நான் வெற்றி பெற்றால் மயிலாப்பூருக்கு பெரிய திட்டம் வைத்திருந்தேன் பக்கிங்காம் கால்வாயினை சுத்தம் செய்து வெள்ள தடுப்பு ஏற்பாடுகளை செய்வது, வீட்டில் ஒருவரையாவது தொழில்முனைவோராக உருவாக்குவது மற்றும் முத்ரா திட்டத்தின் மூலம் புதிய தொழில் தொடங்க உத்தரவாதம் இன்றி மத்திய அரசு கடன் கொடுக்கிறார்கள் சாலையோர வியாபாரிகளுக்கு முதலில் 15,000 ஆயிரம் கிடைக்கும் அதன் பிறகு 25,000, 50,000 என்று கடன் பெறலாம் முதல் தொகை 15,000 ஆயிரம் ரூபாயை திருப்பி கட்டும் பட்சத்தில் உடனடியாக 25,000. கடன் கிடைக்கும்.

தேர்தலில் வெற்றி பெற்றால் தான் சேவை செய்ய வேண்டும் என்றில்லை. அதனால் தான் எனக்கு வாக்களித்தவர்கள் மற்றும் அளிக்காத அனைத்து வாக்காளர்களுக்கும் ஒரு கூட்டத்தை கூட்டி நன்றி சொல்லாமல் மக்களுக்கு இந்த முகாம் மூலம் நன்றியினை தெரிவித்து கொள்வதாக கூறினார் அரசியல் என்பது தேர்தலுக்காக மட்டுமல்ல சேவைக்காகவும் தான் என கூறினார்.

## பாமக நடத்திய அனைத்துக் கட்சிக் கூட்டம் வெற்றி: பங்கேற்ற தலைவர்களுக்கு நன்றி அன்புமணி



சென்னை, ஜூன் 7
பா.ம.க. தலைவர் அன்புமணி வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

தமிழ்நாட்டில் நடைமுறையில் உள்ள 69% இட ஒதுக்கீட்டைப் பாதுகாப்பதற்காக மாநில அரசே சமூகநீதி சர்வே எனும் சாதிவாரி கணக்கெடுப்பை நடத்த வேண்டும் என்று வலியுறுத்தி பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் சென்னையில் நடத்தப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டம் மிகப்பெரிய வெற்றி பெற்றிருக்கிறது. தமிழகத்தில் உள்ள கிட்டத்தட்ட அனைத்துக் கட்சிகளும் சமூகநீதி சர்வேவுக்கு ஆதரவாக ஒருமித்து குரல் கொடுத்துள்ள நிலையில், மக்களின் உணர்வுகளை மதித்து இந்தக் கோரிக்கையை அரசு உடனே நிறைவேற்ற வேண்டும்.

தமிழ்நாட்டில் சமூகநீதி பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் எப்போதும் உறுதியாக இருக்கும் பாட்டாளி மக்கள் கட்சி, இந்த நோக்கங்களுக்காக மேற்கொண்டு வரும் தொடர் நடவடிக்கைகளின் ஒரு கட்டமாகவே சமூகநீதி சர்வே எனும் சாதிவாரி கணக்கெடுப்பை மாநில அரசின் சார்பில் நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி அனைத்து அரசியல் கட்சி மற்றும் சமூக அமைப்புத் தலைவர்கள் கூட்டத்தை சென்னையில் நேற்று நடத்தியது. எனது தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஆளும் த.வெ.க, அதிமுக, பாரதிய ஜனதா, காங்கிரஸ், நாம் தமிழர், த.மா.கா, தேமுதிக உள்ளிட்ட 40க்கும் மேற்பட்ட அரசியல் மற்றும் சமூக அமைப்புகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

திமுக தலைவரும், முன்னாள் முதல்அமைச்சருமான மு.க.ஸ்டாலின் என்னை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுக்கு ஆதரவளிப்பதாகத் தெரிவித்தார். விடுதலை சிறுத்தைகள் கட்சியின் பொருளாளர் எஸ்.எஸ். பாலாஜியும் இதே நிலைப்பாட்டைத் தெரிவித்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் சாதிவாரி சர்வே நடத்தப்படுவதை ஆதரிப்பதாக கடிதம் மூலம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் மாநில அரசின் சார்பில் 2008ஆம் ஆண்டின் புள்ளிவிவரங்கள் சேகரிப்பு சட்டத்தின்படி (The Collection of Statistics Act, 2008) சமூகநீதி சர்வே எனப்படும் சாதிவாரி கணக்கெடுப்பை நடத்துவதற்கான தேவை எப்போதும் இருந்து கொண்டே தான் இருக்கிறது. இட ஒதுக்கீடுகளை பாதுகாப்பதற்கும், மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்துவதற்கும் இந்த கணக்கெடுப்பின் மூலம் கிடைக்கும் தரவுகள் தான் அடிப்படையாக உள்ளன.

இந்தியாவில் இப்போது நடைமுறையில் உள்ள அனைத்து இட ஒதுக்கீடுகளும் 1931ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்டவை. அதில் மாநில அரசுகள் ஏதேனும் மாற்றங்களைச் செய்யும் போது, அதை எதிர்த்து தொடரப்படும் வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றங்கள், நிகழ்காலத் தரவுகள் இல்லை என்று கூறி, இட ஒதுக்கீடுகளை செல்லாது என அறிவிக்கின்றன.

தமிழ்நாட்டில்சாதிவாரிசர்வே நடத்தி, அதில் கிடைக்கும் புள்ளி விவரங்களின் அடிப்படையில் 69% இட ஒதுக்கீட்டை உறுதி செய்ய வேண்டும் என்று உச்சநீதி மன்றம் ஆணையிட்டு 16 ஆண்டுகள் ஆகியும் அது செயல்படுத்தப்படவில்லை. இத்தகைய சூழலில் 69% இட ஒதுக்கீட்டுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்குகள் உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வரும் போது அந்த இட ஒதுக்கீடு ரத்து செய்யப்படும் ஆபத்து உள்ளது. 2008ஆம் ஆண்டின் புள்ளிவிவரங்கள் சேகரிப்பு சட்டத்தின்படி சமூகநீதி சர்வே எனும் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, நிகழ்கால தரவுகள் சேகரிக்கப்பட்டால் தான் இனி இட ஒதுக்கீடுகளை பாதுகாக்க முடியும் என்பது உறுதி.

சமூகநீதி சர்வே நடத்தப்படும் போது, அதன் மூலம் தமிழ்நாட்டில் உள்ள 8 கோடி மக்களின் சமூக, கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதாரநிலைகள் தெளிவாக தெரிந்து விடும். அதை அடிப்படையாகக் கொண்டு மக்களுக்குத் தேவையான சமூகநீதி, வாழ்வாதார மேம்பாடு, சமூகப் பாதுகாப்பு உள்ளிட்ட நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள முடியும். இதைக் கருத்தில் கொண்டு தான் தமிழ்நாட்டில் சமூகநீதி சர்வே எனும் சாதிவாரி கணக்கெடுப்பை நடத்த வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தி வருகிறது.

சமூகநீதி சர்வே நடத்தப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கும் முதல்அமைச்சர் விஜய் தலைமையிலான அரசு உடனடியாக செயல்படுத்த வேண்டும்; அதற்கான அறிவிப்பை வரும் 18ஆம் தேதி சட்டப்பேரவையில் கவர்னர் நிகழ்த்தவுள்ள உரையில் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் என்ற முறையில் எனது அழைப்பை ஏற்று அனைத்துக் கட்சி மற்றும் சமூகத் தலலைவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்ட ஆளும் த.வெ.க.வின் வீர. விக்னேஷ்வரன், அதிமுக முன்னாள் அமைச்சர்கள் அக்ரி. கிருஷ்ணமூர்த்தி, ராமச்சந்திரன், காங்கிரஸ் கட்சியின் எம்.ஏ.முத்தழகன், பாரதிய ஜனதாக் கட்சியின் மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன், துணைத் தலைவர் கரு.நாகராஜன், நாம் தமிழர் கட்சியைச் சேர்ந்த இயக்குனர் சோழன் மு. களஞ்சியம், அ.ம.மு.க.வின் முன்னாள் அமைச்சர் செந்தமிழன், சி.ஆர். சரஸ்வதி, தே.மு.தி.க.வின் வி.சி. ஆனந்தன், தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் தி. வேல்முருகன், கொ.ம.தே.க பொதுச்செயலாளர் ஈ.ஆர். ஈஸ்வரன்,

தமிழ்நாட்டில் சமூகநீதி சர்வே எனப்படும் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தும் பாட்டாளி மக்கள் கட்சியின் கோரிக்கைக்கும் முழு ஆதரவு தெரிவிப்பதாக தொலைபேசி மூலம் தெரிவித்த திமுக தலைவரும், முன்னாள் முதல் அமைச்சருமான மு.க.ஸ்டாலினுக்கும், கூட்டத்தின் முடிவுக்கு ஆதரவு தெரிவித்த விடுதலை சிறுத்தைகள் கட்சியின் பொருளாளர் எஸ்.எஸ். பாலாஜிக்கு நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

தமிழ்நாட்டில் சமூகநீதியை நிலைநிறுத்துவதற்காக இந்த அமைப்புகளுடன் இணைந்து பாட்டாளி மக்கள் கட்சியின் பயணம் தொடரும் என்பதையும் இந்தத் தருணத்தில் உறுதிபடத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குமரி: வெளிநாடு வாழ் இளைஞரிடம் பெண் பேஸ்புக் கணக்கில் பல லட்சம் மோசடி

## தற்கொலை செய்த இளைஞர் சைபர் கிரைம் போலீசார் விசாரணை



மார்த்தாண்டம், ஜூன்.7

மார்த்தாண்டம் அருகே பளுகல் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட மணிவிளை அருகே புரவூர் பகுதியை சேர்ந்தவர் சதீஷ் குமார் ( 44 ). இவர் 12 வருடங்களுக்கு முன்பு விஷ்ணு பிரியா என்ற பெண்ணுடன் திருமணமானது. ஒரு மகள் மற்றும் மகன் உள்ளனர். சதீஷ்குமார் 15 வருடங்கள் சவுதி அரேபியா நாட்டிலும், தொடர்ந்து கடந்த 5 ஆண்டுகளாக துபாய் நாட்டிலும் ஒரு நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறார்.

கடந்தபிப்ரவரிமாதம்முதல்தேவிகா எஸ் நாயர் என்ற பெயரில் பெண்ணின் புகைப்படம் வைத்திருக்கும் முகநூல் பக்கத்தில் இருந்து பிரெண்ட் ரக்வெஸ்ட் வந்துள்ளது. அது மூலம் நட்பாக சாட்டிங் ஆரம்பித்து நாள் செல்ல செல்ல காதலும் , காமமும் கலந்த சாட்டிங் இருவருக்குமிடையே பரிமாற தொடங்கியது. ஒரு கட்டத்தில் மறுபுறம் தேவிகா எஸ் நாயர் என்ற பெயரில் இருந்த நபர் சாட்டிங் ஹிஸ்டரியை ஸ்க்ரீன் ஷாட் எடுத்து சதீஷ் குமாருக்கு அனுப்பி வைத்து பணம் கேட்க தொடங்கி உள்ளதாக கூறப்படுகிறது. பல கட்டங்களாக வெளிநாட்டில் இருந்து கொண்டு சதீஷ் குமார் கேட்கும் போதெல்லாம் பணம் ( சட்ட விரோத பணப்பரிவரத்தனை முறையில் ) பணத்தை அனுப்பி கொண்டே இருந்தார்.

இந்நிலையில் திடீரென முன் பின் தெரியாத கேரளா மாநிலம் ஆற்றிங்கல் பகுதியை சேர்ந்த ராஜீவ் என்பவர் ஒரு எண்ணில் தொடர்பு கொண்டு மிரட்டல் விடுத்து, தேவிகா எஸ் நாயர் என்ற முகநூல் மூலம் இருவரும் சாட்டிங் செய்த ஹிஸ்டரியை ஸ்க்ரீன் ஷாட் ஆக சதீஷ் குமாரின் நண்பர்கள் பலருக்கும் அனுப்பி வைத்துள்ளார். மேலும் சதீஷ் குமாரின் மனைவி விஷ்ணு பியாவுக்கும் வாட்ஸ்அப் மூலமாகவும் நேரடியாகவும் தெரியப்படுத்தாக தெரிகிறது. இதனை தொடர்ந்து சதீஷ் மற்றும் மனைவி விஷ்ணு பிரியா இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு விஷ்ணு பிரியா கணவன் சதீஷ் தொடர்பை துண்டித்து இரு குழந்தைகளுடன் தாய் வீட்டுக்கு சென்றுள்ளார்.

இதனால் துபாயில் இருந்து கடந்த ஏப்ரல் 24 ஆம் தேதி ஊர் திரும்பிய சதீஷ் குமார் மனைவியிடம் சென்று சமாதானம் செய்ய பல முறை முயன்றுள்ளார். ஆனால் மனைவி கணவன் சதீ சை பார்க்கவோ பேசவோவிரும்பாதநிலையில்மிகுந்த மன அழுத்தம் மற்றும் அவமானத்தால் கடந்த மே 17 ஆம் தேதி புதிதாக தான் கட்டி குடும்பத்துடன் குடியேறிய சொந்த வீட்டில் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இதனை தொடர்ந்து தற்போது தேவிகா எஸ் நாயர் என்ற முகநூல் பக்கம் டெலிட் செய்த மர்ம கும்பல் ராஜீவ் என்ற பெயரில் தொடர்பு கொண்ட மொபைல் எண்ணையும் சுவிட்ச் ஆஃப் செய்து தலைமறைவாகி உள்ளனர். இந்நிலையில் சதீஷ் குமாரின் தாய் பளுகல் காவல் நிலையம், கன்னியாகுமாரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் மாவட்ட சைபர் பிரிவு போலீசாரிடம் புகார் அளித்து மகனின் மரணத்திற்கு காரணமாக இருந்த மர்ம கும்பலை கண்டு பிடித்து தகுந்த தண்டனை வழங்க வேண்டும் என புகார் அளித்து தீர்வுக்காக காத்திருக்கிறார்.

பெண் பெயரில் போலி முகநூல் பக்கம் உருவாக்கி இளைஞரை தங்களது வலையில் சிக்க வைத்து பல லட்சம் ரூபாய் பணம் பறித்த பின்பு தற்கொலைக்கு துண்டி உயிரையும் பறித்து ஒரு குடும்பத்தையே நிகதியாக்கி விட்டு தலைமறைவான மர்ம கும்பல் மீது போலீஸ் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.



# குமரி வழியாக கேரளாவுக்கு கள்ள நோட்டுகள் கடத்தல்; 3 பேர் கைது

களியக்கவிளை, ஜூன் 7

பெங்களூருவில் இருந்து குமரி மாவட்டம் வழியாக கேரளா மாநிலம் திருவனந்தபுரம் மாவட்டம் பாறசாலையில் கள்ள நோட்டுகளுடன் வந்த மூன்று பேரை பாறசாலை போலீசார் கைது செய்துள்ளனர். திரைப்பட ஷூட்டிங் சம்பந்தமாக கொண்டுவரப்பட்டதாக பிடிபட்டவர் வாக்குமூலம் அளித்துள்ள நிலையில் போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

திருவனந்தபுரம் மாவட்டத்தை சேர்ந்த சஜி (31), அபி (34), அஷ்டமன் போற்றி (40) ஆகிய மூன்று பேரை கைது செய்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். பிடிபட்ட நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட போலி ரூபாய் நோட்டுகளில் 'சல்ட்ரன் பேங்க் ஆஃப் இந்தியா என்றும், 'ஒன்லி ஃபார் ப்ரொஜெக்ஷன் பர்பஸ்' (For Projection Purpose Only) என்றும் அச்சிடப்பட்டிருந்தது கண்டறியப்பட்டுள்ளது.

கைதான கும்பல், 1 லட்சம் ரூபாய் உண்மையான பணத்தைக் கொடுத்தால் அதற்குப் பதிலாக 10 லட்சம் ரூபாய் கள்ள நோட்டுகளை தருவதாகக் கூறி பொதுமக்களை ஏமாற்றி மோசடி செய்ய முயன்றது விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட மூன்று பேரில் ஒருவருக்கு ஏற்கனவே 2.5 கோடி ரூபாய் கள்ள நோட்டு மோசடி வழக்கில் தொடர்புடைய பழைய குற்றப் பின்னணி இருப்பது போலீஸ் விசாரணையில் உறுதியாகியுள்ளது. பாறசாலை போலீசார் இந்த கள்ள நோட்டு கும்பலின் பின்னணியில் உள்ள மற்ற நபர்கள் குறித்தும், அவர்கள் வேறு எங்கேனும் இதுபோன்று மோசடியில் ஈடுபட்டுள்ளனரா என்பது குறித்தும் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.



தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம் கோவிலாச்சேரி ஊராட்சி முழலை கிராமத்தில் உள்ள பாசன வாய்க்கால்கள் துார்வாரும் பணிகள் நடைபெற்று வருவதை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர்ர.வினோத் (06.06.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். வேளாண்மை பொறியியல்துறை கண்காணிப்பு பொறியாளர் எழிலன், செயற்பொறியாளர் ஐயப்பன், உதவி பொறியாளர் மற்றும் விவசாயிகள் கலந்துகொண்டார்கள்

### திண்டுக்கல் அருகே சோகம்

# வீட்டில் மின் பழுதை சரிசெய்ய முயன்ற 14 வயது சிறுவன் பலி

திண்டுக்கல், ஜூன் 7

திண்டுக்கல் பழைய கரூர் சாலையில் உள்ள குளத்தூர், செல்லப்பிள்ளை கொட்டம் பகுதியைச் சேர்ந்தவர் சற்குணம். இவரது மகன் சந்தோஷ்குமார் (14). இவர்களது வீட்டில் மின்தடை ஏற்பட்டதாக கூறப்படுகிறது. அப்போது வீட்டில் யாரிடமும் தெரிவிக்காமல் சந்தோஷ்குமார் தன்னிச்சையாக மின் பழுதை சரிசெய்ய முயன்றுள்ளார்.

அப்போது எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கியதில் அவர் தூக்கி வீசப்பட்டு கீழே விழுந்தார். இதில் பலத்த காயமடைந்த சந்தோஷ்குமார் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

சம்பவம் குறித்து தகவல் அறிந்த தாடிக்கொம்பு காவல் நிலைய ஆய்வாளர் வசந்தகுமார், சார்பு ஆய்வாளர் சித்திக் மற்றும் காவல்துறையினர் விரைந்து சென்று விசாரணை மேற்கொண்டனர். பின்னர் சிறுவனின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதுகுறித்து தாடிக்கொம்பு போலீசார் வழக்குப் பதிவு செய்து மேலும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அதிமுகவினர் தவெகவில் இணைவது ஏன்?

## செங்கோட்டையன் பதில்

சென்னை, ஜூன் 7

சட்டமன்றத் தேர்தலில் பெரும்பான்மை இடங்களில் வெற்றி பெற்ற த.வெ.க. ஆட்சியமைத்து, அதன் தலைவர் விஜய்முதல்அமைச்சராகபொறுப்பேற்றதைத்தொடர்ந்து, பல்வேறு அரசியல் கட்சிகளில் இருந்து அக்கட்சியில் இணைவோரின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. குறிப்பாக தி.மு.க., அ.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் த.வெ.க.வில் இணைந்து வருகின்றனர். கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான என். ஆனந்த் மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகளை தினமும் ஏராளமானோர் தொடர்புகொண்டு கட்சியில் சேர விருப்பம் தெரிவித்து வருகின்றனர்.

சமீபத்தில் முன்னாள் அமைச்சர் வெல்லமண்டி நடராஜன் மற்றும் முன்னாள் எம்.எல்.ஏ.வும் முன்னாள் டி.ஜி.பி.யுமான நட்ராஜ் ஆகியோர் என். ஆனந்த் முன்னிலையில் த.வெ.க.வில் இணைந்தனர். இதனைத் தொடர்ந்து அ.தி.மு.க.வில் இருந்து பலர் அணியணியாக த.வெ.க.வில் இணைந்து வருவது அரசியல் வட்டாரத்தில் கவனத்தை ஈர்த்துள்ளது.மேலும், அண்மையில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. சார்பில் வெற்றி பெற்ற இசக்கி சுப்பையா, மரகதம் குமரவேல், பி. சத்தியபாமா, ஜெயக்குமார் ஆகியோர் தங்களது எம்.எல்.ஏ. பதவிகளை ராஜினாமா செய்து த.வெ.க.வில் இணைந்தனர்.

இந்நிலையில், அ.தி.மு.க. ஆட்சியில் அமைச்சர்களாக இருந்த எம்.சி. சம்பத், கடம்பூர் ராஜு, உடுமலை ராதாகிருஷ்ணன், என்.ஆர். சிவபதி உள்ளிட்டோரும், முன்னாள் எம்.எல்.ஏ.க்களான பன்னீர்செல்வம், ராஜவர்மன், ஆர். சீனிவாசன், கோவிந்தசாமி, மான்ராஜ், சுந்தர்ராஜ், ராஜமுத்து ஆகியோரும், தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ. ஜெ. கருணாநிதி உள்ளிட்ட பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இன்று த.வெ.க.வில் இணைந்தனர்.பனையூரில் உள்ள த.வெ.க. தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற இந்த பிரமாண்டஇணைப்புநிகழ்ச்சியில்,பொதுச்செயலாளரும் அமைச்சருமான என். ஆனந்த் அவர்களை வரவேற்றார்.

நிகழ்ச்சியில் அமைச்சர்கள் ஆதவ் அர்ஜுனா, வெங்கட்ரமணன், விஜயலட்சுமி, விஜய் தமிழன் பார்த்திபன், ஸ்ரீநாத், மரியா வில்சன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.அதிமுகவினர் தொடர்ச்சியாக தவெகவில் இணைந்து வருவது பற்றி அக்கட்சியின் மூத்த தலைவரும் அமைச்சருமானசெங்கோட்டையனிடம்செய்தியாளர்கள் கேட்டனர். இதற்கு பதிலளித்த செங்கோட்டையன் கூறியதாவது: நல்லாட்சி தமிழகத்தில் தரவேண்டும். அதற்காக நாம் உறுதுணையாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அனைவரும் வந்து இணைகிறார்கள் அது வரவேற்கதக்க ஒன்று. வருபவர்களை அரவணைத்து செல்வோம். அதிமுக நிலை இனி கேள்விக்குறியாகத்தான் இருக்கும்" என்றார்.

# திருவள்ளுவர் பெயரில் அரசு விரைவு போக்குவரத்து கழகத்தை மாற்றிட வேண்டும்

## அகில இந்திய தமிழர் கழகம் முத்துக்குமார் கோரிக்கை ?



நாகர்கோவில்:ஜுன் 07

வெள்ளுடை அணிந்த திருவள்ளுவரை தமிழக மக்களுக்கு நினைவு படுத்திடும் வகையில், தமிழ் நாட்டில் இயக்கப்படும் அரசு விரைவு போக்குவரத்து கழகத்தை மீண்டும் முன்பு இருந்தது போல் திருவள்ளுவர் போக்குவரத்து கழகமாக மாற்றிட வேண்டும் என்று, அகில இந்திய தமிழர் கழகத்தின் நிறுவனர் முத்துக்குமார் தமிழக அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளார். இது குறித்து முத்துக்குமார் தெரிவித்துள்ளதாவது:

திருவள்ளுவருக்கு காவி சாயம் பூச நினைப்பதை தமிழக மக்கள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். கவனர் மாளிகையில் காவி உடை அணிந்த திருவள்ளுவருக்கு மரியாதை செலுத்தியதை அமைச்சர்கள் அருண் ராஜ் மற்றும் வன்னியரசு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இத்தோடு தங்கள் கடமை முடிந்தது என்று அமைச்சர்கள் இருந்து விடக்கூடாது.

நாம் தமிழக அரசிடம் கேட்டுக் கொள்வது என்னவென்றால், தமிழகத்தில் இயக்கப்படும் அரசு விரைவு போக்குவரத்து கழகத்தை முன்பு இருந்தது போல் திருவள்ளுவர் போக்குவரத்து கழகமாக மாற்றிட வேண்டும். மேலும் வெள்ளுடை அணிந்த திருவள்ளுவரை தமிழக மக்களுக்கு நினைவு படுத்திடும் வகையில் பேருந்துகளில் திருவள்ளுவர் புகைப்படங்களை வைத்திட வேண்டும். இவ்வாறு முத்துக்குமார் கூறியுள்ளார்.

### களியக்காவிளையில்

# நள்ளிரவில் தாய், குழந்தையிடம் நகை திருட்டு; ஒருவர் கைது

## 10 மணி நேரத்தில் குற்றவாளியை பிடித்த போலீஸ்



களியக்காவிளை, ஜூன்.7

களியக்காவிளை அருகே மீனச்சல் பகுதியை சேர்ந்தவர் பேபி குமார். இவர்தனது குடும்பத்துடன் வீட்டில் தூங்கி கொண்டிருந்தபோது, நள்ளிரவில் மர்ம நபர் ஒருவர் வீட்டின் பின்புற கதவை உடைத்து உள்ளே புகுந்துள்ளார். ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த பேபி குமாரின் மகள் கீது(27)ன் கழுத்தில் கிடந்த 5 பவுன் தங்க சங்கிலி மற்றும் அருகில் உறங்கி கொண்டிருந்த 3 மாத குழந்தையின் கையில் இருந்த அரை பவுன் தங்க பிரேஸ்லெட் ஆகியவற்றை திருடிக்கொண்டு அந்த நபர் தப்பிச் சென்றுள்ளார்.

இது குறித்து களியக்காவிளை போலீஸ் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். குமரி மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஸ்டாலின் உத்தரவின் பேரில், மார்த்தாண்டம் உட்கோட்ட துணை சூப்பிரண்டு நல்லசிவம் மற்றும், களியக்காவிளை இன்ஸ்பெக்டர் பரமேஸ்வரன் மற்றும் மகேந்த் தலைமையிலானதனிப்படைபோலீசார் தீவிர விசாரணையில் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்தை சுற்றியுள்ள சி.சி.டி.வி. காமிரா காட்சிகள் மற்றும் தொழில்நுட்ப ஆதாரங்களை ஆய்வு செய்ததில், புலந்தேரி அய்ந்திதோட்டம், புத்தன்வீடு பகுதியை சேர்ந்த சிமி குட்டன் (40) என்பவர் இந்த திருட்டில் ஈடுபட்டது உறுதியானது. இதனைத் தொடர்ந்து, சிமி குட்டனை கைது செய்து நகைகளை மீட்டனர். திருட்டில் ஈடுபட்ட சிமி கைது செய்து, திருடப்பட்ட மீட்ட நகைகளை களியக்காவிளை போலீஸ் குழுவினரை போலீஸ் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் பாராட்டினர்.

### கிருஷ்ணகிரியில்

# பல்வேறு கட்சியை சேர்ந்தவர்கள் தவெக மத்திய மாவட்ட கழகச் செயலாளர் சுரேஷ் முன்னிலையில் கட்சியில் தங்களை இனைத்துக் கொண்டனர்



கிருஷ்ணகிரி ஜூன்7

தமிழகம் முழுவதும் தமிழக வெற்றி கழகம் தமிழத்தில் ஆட்சியை பிடித்ததை தொடர்ந்து மாற்று கட்சிகளை சேர்ந்தவர்கள் தமிழக வெற்றி கழகத்தில் தங்களை இணைந்து வருகின்றனர்.

இதேபோல கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த அதிமுக, திமுக உள்ளிட்ட பல்வேறு கட்சிகளை சேர்ந்தவர்கள் தவெக கட்சியில் ஆர்வத்துடன் இணைந்து வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக கிருஷ்ணகிரி டான்சியில் அமைந்துள்ள மத்திய மாவட்ட தவெக அலுவலகத்தில் மாற்று கட்சியினர்கள் தவெக கட்சியில் இணையும் நிகழ்ச்சி நடைப்பெற்று, கிருஷ்ணகிரி மத்திய மாவட்ட தவெக செயலாளர் சுரேஷ் முன்னிலையில், திமுக நிர்வாகி மனோஜ், மற்றும் அதிமுக முன்னாள் மாவட்ட செயலாளர் தென்னரசு தலைமையில் நடைப்பெற்ற இந்த நிகழ்வின் போது அதிமுகவில் இருந்து, தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக சட்ட ஆலோசகர் வழக்கறிஞர் அன்பரசு, வழக்கறிஞர் கோவிந்தராஜ், வழக்கறிஞர் கல்வியரசு, அதிமுகவை சேர்ந்த சித்திக், சிவா, பாஸ்கர், கில்பர்ட், குமரேசன், அங்கன்வாடி ஊழியரும், மாவட்ட செயற்குழு உறுப்பினருமான மஞ்சுளா, மாதம்மாள் மற்றும் செண்பகம் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்துக்கொண்டு தமிழக வெற்றி கழகத்தில் தங்களை இனைத்துக் கொண்டனர்.

பல்வேறு கட்சிகளில் இருந்து தவெக கட்சியில் இணைந்த அனைவருக்கும் மத்திய மாவட்ட கழகச் செயலாளர்சுரேஷ் கட்சி துண்டுகளைஅணிவித்து என் முகத்துடன் வரவேற்றார். இந்த நிகழ்வின்போது மாவட்ட மருத்துவர் அணி அமைப்,பாளர் ஜி.பார்த்திபன் தொழில் அதிபர் கோல்டன் சுரேஷ், அனிதா கிரைனைட் உரிமையாளர் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.



# பெரிய கவுண்டனூர் கிராமத்தில் ஸ்ரீ மாரியம்மன் திருவிழா கிராம மக்கள் பொங்கல் வைத்து, கிடா வெட்டி அம்மனை வழிபட்டனர்

கிருஷ்ணகிரி, ஜூன் 7

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அடுத்த பெரிய கவுண்டனூர் கிராமத்தில் ஸ்ரீ மாரியம்மன், தேசத்து மாரியம்மன், அஃகு மாரியம்மன், காளியம்மன் உள்ளிட்ட அம்மனுக்கு கூழ் ஊற்றும் திருவிழா நடைபெற்றது. இத் திருவிழா இரண்டு நாள்கள் நடைபெற்ற நிலையில் முதல் நாள் வெள்ளிக்கிழமை மாலை கூழ் ஊற்றும் நிகழ்ச்சியும், இரண்டாவது நாளாக சனிக்கிழமை விடியற்காலை அம்மனுக்கு பொங்கல் வைத்து, கரகம் ஜோடித்து, அம்மனை வரவழைத்து, கரகத்துடன் மாவிளக்கு ஊர்வலம் நடந்தது. அப்பொழுது சாமி ஊர்வலம் மற்றும் கரகத்துடன் சாமியை பள்ளக்கில் எடுத்துக் கொண்டு ஒவ்வொரு வீடாக சென்றனர். வீட்டில் உள்ள பெண்கள் தண்ணீர் ஊற்றி சாமியை வீட்டுக்கு அழைத்து தேங்காய் உடைத்து கற்பூரம் ஏற்றி தீபாதாரணை காட்டி வழிபட்டனர். இவ்விழா ஏற்பாடுகளை ஊர் கவுண்டர்கள் P.முனுசாமி, வாழ்த்துக்கள். V.கணேசன், ஊர் தர்மகத்தா N.ஐய்யப்பன், ஊர் மந்திரி கவுண்டர் R.பெருமாள் ஆகியோர் முன்னிலையில் இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# குமரி நான்கு வழி சாலை பணிகள் விஜய் வசந்த் எம்.பி. ஆய்வு



நாகர்கோவில், ஜூன்.7

கன்னியாகுமரி முதல் கேரளா எல்லை பகுதியான செங்காவிளை , காரோடு வரையிலான நான்கு வழி சாலை 66 கிமீ தொலைவில் , 93 பாலங்களுடன் அமைக்கும் பணி 2003ம் ஆண்டு தொடங்கி பணி நடைபெற்று வருகிறது.இந்தசாலைகள்சீரமைக்கும் பணிக்கு போதிய மண் கிடைக்காமல் காலதாமதம் ஆகிக் கொண்டே சென்றது. இதை அடுத்து பாலப் பணியை விரைந்து முடிக்க வேண்டுமென அரசியல் கட்சியினர் மற்றும் சமூக ஆர்வலர்கள் தொடர்ந்து கோரிக்கை எழுப்பி வந்தனர்.இதைஅடுத்துதிருநெல்வேலி மாவட்டத்திலிருந்து மண் கொண்டுவரப்பட்டு சாலைகள் சீரமைக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் சாலை பணியினை துரிதப்படுத்த கேட்டு கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த் தேசிய நெடுஞ்சாலை துறை அமைச்சரிடம் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில், தற்போது நான்கு வழி சாலை மற்றும் பாலம் அமைக்கும் பணிகள் வேகமாக நடைபெற்று வருகிறது. இந்நிலையில் நேற்று கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த் ,நாகர்கோயிவிலை அடுத்த புத்தேரியில் இருந்து தேசிய நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகளுடன் தோட்டியோடு, கல்குறிச்சி, பள்ளியாடி, நட்டாலம் உள்ளிட்ட பகுதிகளில் நேரடியாக ஆய்வு மேற்கொண்டார்.

மேலும் சாலையை தொட்டு அமைந்துள்ள பொதுமக்களிடம் சாலை மற்றும் பாலங்கள் குறித்து குறைகள் கேட்டு தெரிந்ததோடு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் அதிகாரிகளிம் சாலை மற்றும் பால பணிகளை விரைந்து முடிக்கும்படி கேட்டுக் கொண்டார். அவருடன் நான்கு வழி சாலை நகாய் திட்ட இயக்குனர் சஜின் குமார், திட்ட மேலாளர் ஜெய்சங்கர், திட்ட இயக்குனர் உதவியாளர் சிவா, காங்கிரஸ் மாநில செயலாளர் வழக்கறிஞர் சினிவாசன் மற்றும் நிர்வாகிகள் உட்பட பலர் உடன் இருந்தனர்.

## உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு

# தேரூர் பேரூராட்சி சுற்றுவட்டார பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதத்தில் சிறப்பு மன்ற கூட்டம்



சுசீந்திரம்.ஜீன்.7

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டுதேரூர்பேரூராட்சிசுற்றுவட்டார பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதத்தில் சிறப்பு மன்ற கூட்டம் நடைபெற்றது

தேரூர் பேரூராட்சியில் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு சிறப்பு மன்ற கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026 பற்றி மன்ற உறுப்பினர்களுக்கு விளக்கிக் கூறப்பட்டது. இதில் தேரூர் பேரூராட்சி தலைவர்அமுதா ராணி அவர்கள் தலைமை வகித்தார். பேரூராட்சி துணைத் தலைவர் மாதவன் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர் சங்கர சுப்பிரமணியன் முன்னிலை வகித்தனர். கூட்டத்திற்கு மன்ற உறுப்பினர்கள் எட்வர்ட் ராஜ், ஆறுமுகம், ஐயப்பன்,.சங்கரம்மாள்,. ராஜேஸ்வரி, வீரபத்திர பிள்ளை சரஸ்வதி தீபா ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் பொதுமக்கள் வீடுகளில் உருவாகும் திடக் கழிவுகளை நான்கு வகைகளாக பிரித்து வீடு தோறும் சேகரிக்க வரும் தூய்மை பணியாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என பேரூராட்சி செயல் அலுவலர் சங்கர சுப்பிரமணியன் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி மக்கும் கழிவுகளான காய்கறி கழிவுகள், உணவு கழிவுகள், இலைகள், பூக்கள் உள்ளிட்ட தோட்ட கழிவுகளை பச்சை நிறக் கூடையிலும், காகிதம், உடைந்த பிளாஸ்டிக் பாட்டில்கள், கண்ணாடி பாட்டில்கள், மக்கும் பிளாஸ்டிக் கவர்கள் உள்ளிட்ட மறுசுழற்சி செய்யக்கூடிய கழிவுகளை நீல நிறக் குடையிலும் சேகரிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. மேலும் டயப்பர், நாப்கின், பஞ்சுகள், சிரிஞ்சுகள் உள்ளிட்ட மறுசுழற்சி செய்ய முடியாத மருத்துவக் கழிவுகளை சிவப்பு நிறக் கூடையிலும், பேட்டரிகள், காலாவதியான மருந்துகள், ரசாயன பொருட்கள், சி எப் எல் பல்ப்புகள் உள்ளிட்ட சிறப்பு கவனம் செலுத்த வேண்டிய ஆபத்தான கழிவுகளை கருப்பு நிறக் கூடையிலும்சேகரித்து வழங்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.



திருவண்ணாமலை மாவட்ட கலெக்டர் வந்தனா கார்க் தலைமையில் (06.06.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வனப் பகுதிகளில் உள்ள ஊரக சாலைகளை மேம்படுத்துவது குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.



தருமபுரிமாவட்டம்பாப்பிரெட்டிப்பட்டிமுன்னாள்சட்டமன்றஉறுப்பினர்கோவிந்தசாமி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக த்திலிருந்து விலகி தமிழக வெற்றி கழகத்தில் இணைந்தார். அவரை தமிழக வெற்றி கழகத்தின் பொதுச்செயலாளர் ஆனந்த் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார். இந்த இணைப்பு விழாவில் அமைச்சர்கள் வெங்கட்ராமன் ,ஆதவ் அர்ஜுன் ,மரிய வில்சன் ஆகியோர் உடனிருந்தனர்.

## குமரி மாவட்டத்தில்

# நீர்வளத்துறைக்கு சொந்தமான கால்வாய்கள் சாலையாக மாற்றம்

### அரசுக்கு இழப்பு ஏற்படுத்திய நீர்வளத்துறை அதிகாரிகள்

நாகர்கோவில், ஜூன். 7

கன்னியாகுமரி மாவட்டத்தில் வளர்ச்சிப்பணிகள் என்ற பெயரில் உள்ளாட்சி நிர்வாகங்களால் பாசன கால்வாய்கள், குளங்கள் உட்பட்ட நீர்நிலைகளை அழித்து சேதப்படுத்தி, சாலையாக மாற்றப்படும் சம்பவங்கள் பல ஆண்டுகளாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதை தடுத்து நிறுத்தி, சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டிய நீர்வளத்துறை அதிகாரிகள் வேடிக்கை பார்ப்பதும், அதன் காரணமாக கடைவரம்பு விவசாய பகுதிகளுக்கு தண்ணீர் செல்லாமல் விவசாயமும், இயற்கை எழிலும் அழிந்து வருவதும் தொடர்கதையாக உள்ளது.

அந்த வகையில், கடந்த சில வாரங்களில் பட்டணங் கால்வாயின் கிளைக் கால்வாய்களான காட்டுக்கடை வாணியக்குடி ரீத்தாபுரம் கிளை கால்வாய் மற்றும் காட்டுக்கடை சைமன்காலனி ரீத்தாபுரம் கிளை கால்வாய் ஆகியவற்றிலுள்ள 'சைபன்கள்' உடைத்து அழிக்கப்பட்டு, மண்ணால் மூடப்பட்டு, கான்கிரீட் மற்றும் தார் போட்டு பாலப்பள்ளம் பேரூராட்சி நிர்வாகத்தால் சாலையாக மாற்றப்பட்டுள்ளது. இதனால் பல கிலோமீட்டர் தூரம் சானல் மற்றும் கடைவரம்பு பகுதிகளுக்கு தண்ணீர் வழங்க முடியாமல் கால்வால்கள் துண்டிக்கப்பட்டு கிடக்கிறது.

இத்தகைய குற்றச்செயல்கள் நடைபெறும் போது நீர்வளத்துறை அதிகாரிகள் உடனடியாக சம்பவ இடத்திற்கு சென்று தடுத்து நிறுத்த வேண்டும். சேதப்படுத்திய நபர்கள் மீது காவல்துறையில் முறையாக புகார் கொடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும். சேதப்படுத்தியவர்களை வைத்தே கட்டுமானங்களை சீரமைக்க வைக்க வேண்டும். அல்லது அதற்கான தொகையை குற்றவாளிகளிடம் இருந்து சட்ட ரீதியாக வசூலிக்க வேண்டும். என்ற சட்ட விதிமுறைகள் உள்ளது.

ஆனால், மேற்படி கால்வாய் சைபன்களை சமூக விரோதிகள் ஒப்பந்ததாரர் என்ற பெயரில் உடைப்பதை நேரடியாக பார்த்த நீர்வளத்துறை பணியாளர்கள் மற்றும் பணி மேற்பார்வையாளர் போன்றோர் குற்றவாளிகளுக்கு உறுதுணையாக இருந்ததுடன் இது சம்பந்தமான தகவலையும் மேலதிகாரிகளுக்கு தெரிவிக்கவில்லை.தற்போது நீரினை பயன்படுத்துவோர் சங்க ஆட்சிமண்டல உறுப்பினர் ஜஸ்டின்தாஸ் என்பவர் இது குறித்து விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவரிடம் நேரடியாக புகார் மனு அளித்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு நீர்வளத்துறையின் மேற்படி அதிகாரிகளுக்கு உத்தரவிட்ட பிறகும் இது வரை நடவடிக்கை இல்லை. எனவே, அடுத்தகட்டமாக லஞ்சஒழிப்புத்துறை விசாரணை நடத்த கேட்டு உயர்நீதிமன்றத்தை நாட முடிவு செய்யப்பட்டுள்ளதாக ஜஸ்டின் தாஸ் தெரிவித்தார்.



## வி கே புரமோசன்ஸ் சார்பில்

# அரசு பள்ளி மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகம் வழங்கும் விழா

கோவை ஜூன்:07

தமிழகத்தில் 20க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் ரியல் எஸ்டேட் துறையில் தனித்துவமாக இயங்கி வரும் வி கே புரமோசன்ஸ் நிர்வாக இயக்குனர் வெற்றிவேல் கோவை அத்தப்பகவுண்டன் புதூர் பகுதியில் செயல்பட்டு வரும் அரசு நடுநிலைப் பள்ளியில் சுமார் 50க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகளுக்கு இலவச நோட்டு புத்தகங்கள்,எழுது பொருட்கள் உள்ளிட்ட உதவி பொருட்களை வழங்கிய பிறகு பத்திரிகையாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசும் போது,கடந்த ஐந்து வருடமாக இந்த ரியல் எஸ்டேட் துறையில் தாங்கள் இருந்து வருவதாகவும் எங்களுக்கு வரும் வருமானத்தில் ஒரு பகுதியை ஏழை எளிய மக்கள்,முதியோர்கள்,மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்டவர்களுக்கு உதவி செய்து வருவதாகவும்,அதில் ஒரு பகுதியாக இந்த பள்ளி மாணவ மாணவிகளுக்கு உதவிகளை செய்து வருவதாகவும் தெரிவித்தார்.

இந்த இளம் வயதில் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து தற்சமயம் மற்றவர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக வாழ்வில் முன்னேறிக் கொண்டிருப்பதாகவும்,தற்சமயம் தங்களுடைய நிறுவனத்தில் 300க்கும் மேற்பட்டோர்க்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளதாகவும்,இன்னும் சில மாதங்களில் மீண்டும் ஐந்து மாவட்டங்களில் தங்களுடைய கிளைகளை துவங்க இருப்பதாகவும் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் அரசு பள்ளியின் தலைமை ஆசிரியர் ஜெயலட்சுமி சண்முகம்,ஐஎஸ்டிஒ தொண்டு நிறுவன நிறுவனர் லாசர் ராஜன் மற்றும் விகேப்ரோமோசன்ஸ் நிர்வாக மேலாளர் ஜெயபிரகாஷ்,ஹருண்,மனித வள மேம்பாடு அலுவலர் அஜய் மற்றும் ஏராளமான பள்ளி மாணவ மாணவிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## திருச்சி

# கார் மோதி தூக்கி வீசப்பட்ட மூதாட்டி பலி

திருச்சி, ஜூன் 7

திருச்சி சென்னை தேசிய நெடுஞ்சாலையில் கூத்தூர் மேம்பாலம் அருகே சாலையில் நடந்து சென்ற மூதாட்டி ஒருவர் மீது கார் மோதியதில், அவர் தூக்கிவீசப்பட்டுசம்பவஇடத்திலேயேஉயிரிழந்தார். இது தொடர்பாக வழக்கு பதிந்த கொள்ளிடம் போலீசார், மூதாட்டியின் உடலை பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்து, உயிரிழந்த மூதாட்டி யார் என்பது குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## திண்டிவனம் அருகே

# பட்டப்பகலில் சலூன் கடை உரிமையாளர் வெட்டிக்கொலை



விழுப்புரம், ஜூன் 7

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அருகே இளைஞர் தினேஷ் (23) என்பவரை 5 பேர் கொண்ட மர்ம நபர்களால் வெட்டிக்கொலை செய்துள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

சலூன் கடை நடத்தி வரும் தினேஷை காரில் வந்த மர்ம கும்பல் கடைக்குள் புகுந்து வெட்டிக்கொலை செய்துவிட்டு தப்பியோடி உள்ளனர்.

பலத்த காயமடைந்து உயிருக்கு போராடிய நிலையில் தினேஷ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில், தினேஷ் சிகிச்சை பலனின்றி உயரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்துள்ள போலீசார் மேற்கொண்டு விசாரணை நடத்தி வருகின்றனர். திண்டிவனம் அருகே பட்டப்பகலில் வாலிபர் ஒருவர் மர்ம கும்பலால் வெட்டிபடுகொலை செய்யப்பட்ட சமப்வம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## கிருஷ்ணகிரியில்

# நகைக்கடை சுவரை துளையிட்டு 3 கிலோ வெள்ளி கொள்ளை



கிருஷ்ணகிரி, ஜூன் 7

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர்அருகே வரட்டனப்பள்ளி பகுதியில் சரவணன் என்பவருக்கு சொந்த நகைக்கடை உள்ளது. இன்று காலை சரவணன் வழக்கம்போல் நகைக்கடையை திறப்பதற்காக வந்தார்.

அப்போது கடையின் பின்புற சுவரில் துளையிடப்பட்டு இருந்ததைக் கண்டு அவர் அதிர்ச்சியடைந்தார். கடையின் உள்ளே சென்று பார்த்த போது, அங்கிருந்த 3 கிலோ வெள்ளி நகைகள் திருடப்பட்டிருந்தது தெரியவந்தது.

இது குறித்து உடனடியாக காவல்துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து சம்பவ இடத்திற்கு வந்து சேர்ந்த போலீசார், கைரேகை நிபுணர்கள் மற்றும் மோப்ப நாய்கள் உதவியுடன் ஆதாரங்களை சேகரித்தனர்.

அப்போது கடையில் இருந்த இரும்பு லாக்கரை உடைக்க கொள்ளையர்கள் முயற்சி செய்துள்ளனர் என்பது தெரியவந்தது. அந்த லாக்கரின் சாவி அருகில் உள்ள ஆணியில் தொங்கவிடப்பட்டிருந்ததை கவனிக்காமல் கொள்ளையர்கள் இச்செயலில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் லாக்கரை உடைக்க முடியாததால் வெள்ளிப் பொருட்களை மட்டும் திருடிவிட்டுச் சென்றுள்ளனர். இதனால் லாக்கரில் இருந்த சுமார் 2 கிலோ தங்க நகைகள் நல்வாய்ப்பாக தப்பி இருக்கின்றன.

இந்த கொள்ளை சம்பவம் தொடர்பாக தகவல் அறிந்து கிருஷ்ணகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தங்கதுறை அங்கு நேரில் சென்று ஆய்வு நடத்தினார். இது தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து கொள்ளையர்களை தீவிரமாக தேடி வருகின்றனர். நகைக்கடையில் நடந்த இந்த துணிகர கொள்ளை சம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



குமரி

# போலீசின் வாராந்திர கவாத்து நிகழ்ச்சி மாவட்ட கண்காணிப்பாளர் அறிவுறுத்தல்

நாகர்கோவில், ஜூன்.7

கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் உத்தரவின்பேரில், மாவட்ட காவல்துறையினரின் உடற்திறன், தொழில்திறன் மற்றும் ஒழுக்கத்தை மேம்படுத்தும் நோக்கில் வாரந்தோறும் சனிக்கிழமையன்று மாவட்டத்தின் அனைத்து காவல் உட்கோட்ட தலைமையிடங்களிலும் வாராந்திர கவாத்து மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக, நேற்று நாகர்கோவிலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காவல் துறையினருக்கு கவாத்து பயிற்சி, யோகா பயிற்சி, ஆயுதங்களை பாதுகாப்பாகவும் திறமையாகவும் கையாளும் முறைகள் தொடர்பான சிறப்பு பயிற்சிகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மாவட்ட எஸ்பி ஸ்டாலின் கலந்து கொண்டு காவல்துறையினரிடம் கூறியதாவது: குற்றங்கள் நடைபெறுவதற்கு முன்பே அவற்றை தடுக்கும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

பொதுமக்களிடம் மரியாதையுடனும், மனிதநேயத்துடனும் அணுகுமுறையை கடைபிடிக்க வேண்டும். காவல்துறையின் மீது பொதுமக்களுக்கு நம்பிக்கையும் நன்மதிப்பும் அதிகரிக்கும் வகையில் செயல்பட வேண்டும். சட்டம்ஒழுங்கு பராமரிப்பு மற்றும் குற்றத் தடுப்பு பணிகளில் முழு அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும். காவல்துறையினரின் உடற்திறன் மற்றும் மனவலிமையை தொடர்ந்து மேம்படுத்திக் கொள்ள வேண்டும். என்பது போன்ற பல்வேறு முக்கிய அறிவுறுத்தல்களை போலீசாருக்கு வழங்கினார்.

இந்த வாராந்திர கவாத்து மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள் நாகர்கோவில், ஆயுதப்படை வளாகம், குளச்சல், தக்கலை, மார்த்தாண்டம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய காவல் உட்கோட்ட தலைமையிடங்களில், சம்பந்தப்பட்ட உட்கோட்ட காவல் அதிகாரிகள் தலைமையில் நடைபெற்றன.

குமரியில் தொடர் மழை

# ரப்பர் பால் வெட்டும் தொழில் முடக்கம் தொழிலாளர்கள் பாதிப்பு



நாகர்கோவில், ஜூன். 7

கன்னியாகுமரி மாவட்டத்தில் பிரதான தொழில் ரப்பர் விவசாயம் ஆகும். மாவட்டத்தில் எல்லா இடங்களிலும் ரப்பல் பரவலாக உள்ளது. ரப்பர் விவசாயத்திற்கு ஏற்ற காலநிலை இங்கு உள்ளதால் ஏராளமானவர் இந்த தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

பெரிய எஸ்டேட், தோட்டங்கள் என சுமார் 75 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் ரப்பர் விவசாயம் குமரியில் செய்யப்பட்டு வருகிறது. ரப்பர் மூலம் நேரடியாகவும், மறைமுகமாகவும் சுமார் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தொழில் வாய்ப்பு பெறுகின்றனர். இந்த ஆண்டு ரப்பர் பால் வெட்டும் பணி தொடங்கிய சில நாட்களிலேயே வெப்ப சலனம் காரணமாக குமரி மாவட்டத்தில் மலைப்பகுதிகள், மலையோர பகுதிகளில் சாரல் மழை தொடர்ந்த நிலையில் தற்போது தென்மேற்கு பருவமழை தொடங்கி அடை மழையாக பெய்து வருகிறது. இதனால் கடந்த மூன்று வாரங்களாக பால் வெட்டும் பணிகள் முடங்கியுள்ளது.

குறிப்பாக வளைகுடா நாடுகளின் ஏற்பட்டுள்ள போர் சூழல் காரணமாக கச்சா எண்ணெய் தட்டுப்பாடு ஏற்பட்டு, பெட்ரோலிய பொருள்களின் விலை கடுமையாக உயர்ந்து வருகிறது. இதனால் இயற்கை ரப்பர் பயன்பாடு அதிகரித்துள்ளது. ரப்பர் விலை சர்வதேச மார்க்கெட்டில் ரூ. 300 ஐ நெருங்கி வருகிறது. ரப்பர் விலையேற்றம் உள்ளூர் விவசாயிகளுக்கு மகிழ்ச்சி ஏற்படுத்தி உள்ளது. ஆனால் மழை காரணமாக பணிகள் முடங்கி உற்பத்தி பாதித்திருப்பது விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களை பாதிப்படைய செய்துள்ளது.

# தவெக மேற்கு மாவட்ட கழக செயலாளர் மதன், புதிதாக பொறுப்பேற்ற மாவட்ட ஆட்சித் தலைவரை சந்தித்து வாழ்த்து



கமுதி, ஜூன் 7

ராமநாதபுரம் மாவட்டத்தில் புதிதாக பொறுப்பேற்றுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் சிவகுரு பிரபாகரன் அவர்களை தமிழக வெற்றி கழகத்தின் ராமநாதபுரம் மேற்கு மாவட்ட கழக செயலாளர் மதன் மரியாதை நிமித்தமாக சந்தித்து வாழ்த்து தெரிவித்தார். கமுதியில் உள்ள கோட்டைமேடு அரசு உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித் தலைவருக்கு சால்வை அணிவித்து தனது வாழ்த்துக்களை தெரிவித்தார். மேலும், மாவட்ட நிர்வாகத்தின் மக்கள் நலப் பணிகள் சிறப்பாக அமையவும், அரசுத் திட்டங்கள் பொதுமக்களுக்கு முழுமையாக சென்றடையவும் தனது வாழ்த்துக்களை தெரிவித்தார். இந்நிகழ்வில் அரசு அதிகாரிகள், தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் உடனிருந்தனர்

மது விற்பனை செய்த

# பெரம்பலூர் தவெக பிரமுகர் கட்சியில் இருந்து நீக்கம்



பெரம்பலூர், ஜூன் 7

பெரம்பலூர் மாவட்டம் பாடாலூரில் சட்டவிரோதமாக மது விற்ற ஆலத்தூர் மேற்கு ஒன்றிய தவெக பிரமுகர் உமேஷ் (36) என்பவரைத் தனிப்படை போலீஸார் கைது செய்து, 40 மது பாட்டில்களைப் பறிமுதல் செய்தனர். டாஸ்மாக் கடையில் மது வாங்கி கூடுதல் விலைக்கு விற்றது விசாரணையில் தெரிந்தது. இதற்கிடையே, உமேஷைக் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்து அதிரடியாக நீக்கி தவெக மாவட்டத் தலைமை உத்தரவிட்டுள்ளது.



முசிறியில்

# விபத்து இழப்பீடு வழங்காத 2 அரசு பேருந்துகள் ஜப்தி

திருச்சி, ஜூன் 7

திருச்சி மாவட்டம் முசிறி பேருந்து நிலையம் அருகே 2022 ஆம் ஆண்டு அரசு பேருந்து மோதி உயிரிழந்த நவீன் குமார் மற்றும் அவரது தாய் சரசு குடும்பத்திற்கு 54 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டது. நீண்ட நாட்களாகியும் இழப்பீடு வழங்கப்படாததால், இன்று முசிறி பேருந்து நிலையத்தில் இரண்டு அரசு பேருந்துகளை நீதிமன்ற ஊழியர்கள் ஜப்தி செய்து நீதிமன்ற வளாகத்திற்கு எடுத்துச் சென்றனர். இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

# அண்ணாமலை புதிய கட்சி அறிவிப்பு

## பாஜக அவசர ஆலோசனை

திருச்சி , ஜூன் 7

தமிழக பாஜகவின் முன்னாள் தலைவர் அண்ணாமலை அக்கட்சியில் இருந்து விலகி புதிய அரசியல் கட்சியை தொடங்கியுள்ளார். இதை தொடர்ந்து, திருச்சியில் நாளை மறுநாள் (ஜூன் 8) பாஜக மாவட்ட தலைவர்கள் மற்றும் மாநில நிர்வாகிகளின் அவசர ஆலோசனை கூட்டம் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் அனைவரும் கட்டாயம் பங்கேற்க வேண்டும் என்றும், தவறினால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தமிழக பாஜகதலைமை தொலைபேசிவாயிலாகஎச்சரிக்கை விடுத்துள்ளது.

# ஆட்டோ மோதி முதியவர் மரணம்

இரணியல்.ஜீன்.7

நாகர்கோவில் அருகே உள்ள இடலாக்குடி என்ற இடத்தை சேர்ந்தவர் சலீம் 45 இவர் ஆட்டோ வாடகைக்கு ஓட்டி வருகிறார் கடந்த 3 ம் தேதி தக்கலை சென்று பயணிகள் இறக்கி விட்டு நாகர்கோவில் திரும்பி வரும் போது தோட்டி கோடு அருகே வைத்து சாலையை கடக்க முயன்ற சுமார் அறுபது வயது முதியவர்மீதுமோதியதில்தலைகைகால்கள்படுகாயம் அடைந்த நிலையில் ஆசாரி பள்ளம் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார் மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்தும் பலனின்றி நேற்று இரவு பரிதாபமாக உயிரிழந்தார்

இது குறித்து வில்லுக்குறி விஏஒ குமாரி சிந்து அளித்த புகாரில் பேரில் இரணியல் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் முத்து கிருஷ்ணன் வழக்கு பதிவு செய்து இறந்து போன முதியவர் யார் எந்த ஊர் என்ன பெயர் என்று விசாரணை நடத்தி வருகின்றனர்

திருச்சி

# மூதாட்டியிடம் பட்டபகலில் நகை திருடிய பெண்கள்

திருச்சி, ஜூன் 7

திருச்சி கோட்டை காசியப்பிள்ளை சந்தையைச் சேர்ந்த 72 வயதான மங்கம்மாள் வீட்டில் தனியாக இருந்தபோது,மருத்துவப்பரிசோதனைசெய்வதாகக் கூறிஇரண்டுபெண்கள்வீட்டிற்குள்நுழைந்துள்ளனர். மங்கம்மாளின் கையைப் பிடித்துக்கொண்டு ஒருவர் அவரை இறுக்கமாகப் பிடித்திருக்க, மற்றொரு பெண் வீட்டில் இருந்த ஆறு பவுன் மதிப்புள்ள இரண்டுதங்கச்சங்கிலிகளைத்திருடிச்சென்றுள்ளார். இது குறித்து போலீசார் வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



தருமபுரி மாவட்டத்தில்

# மனிதநேய மக்கள் கட்சியின் மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம்

தருமபுரி ஜூன் 07

தருமபுரி மாவட்ட மனித நேய மக்கள் கட்சியின் மாவட்ட செயல் வீரர்கள் கூட்டம் கட்சித் தலைவர் ஜவாஹிருல்லா தலைமையில் நடைபெற்றது. செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் கூறியதாவது. காவிரி ஆற்றில் மேகதாது அணை கட்ட கர்நாடக மாநில அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது .அங்கு அணை கட்டப்பட்டால் காவிரி ஆற்றின் கடமடை பகுதியான நாகப்பட்டினத்திற்கு இனிமேல் தண்ணீர் கிடைக்காது. கர்நாடகத்தில் காங்கிரஸ் ஆட்சி நடக்கிறது த. வெ. க அரசியலில் காங்கிரஸ் பங்கேற்றுள்ளது. எனவே மேகதாது அணை கட்டுவதை தடுக்க தமிழக முதலமைச்சர் விஜய் அனைத்து கட்சி கூட்டத்தை கூட்ட வேண்டும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் பெயரை மாற்றி உள்ள மத்திய அரசு ஆண்டுக்கு 125 நாட்கள் வேலை வழங்குவோம் என்று கூறியுள்ளது. ஆனால் கடந்த மூன்று ஆண்டுகளில் இந்த திட்டத்திற்காக தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட நிதி 69 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது. கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்திற்கும், பெண்களின் மேம்பாட்டிற்கும் உதவிய இந்த திட்டத்திற்கு கூடுதல் நிதியை பெற தமிழ்நாடு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசு தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். புதிய கட்சி தொடங்கும் அண்ணாமலையின் செயல்பாட்டை பொறுத்திருந்து பார்க்க வேண்டும். தருமபுரி மாவட்டம் பி. துறிஞ்சிப்பட்டியில் பள்ளிகள் மற்றும் வழிபாட்டுத்தலங்கள் உள்ள பகுதியில் செயல்படும் அரசு மதுக்கடையை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் போராட்டம் நடத்தப்படும்

இவ்வாறு அவர் கூறினார்.




தருமபுரியில்

# பசுமை தாயகம் நடத்தும் +2 முடித்த மாணவர்களுக்கான உயர்கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சி; சட்டமன்ற உறுப்பினர் பங்கேற்பு

தருமபுரி ஜூன் 07

தருமபுரியில் பசுமை தாயகம் நடத்தும் 12 ஆம் வகுப்பு முடித்த மாணவ, மாணவிகளுக்கான உயர்கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சி குண்டலபட்டியில் உள்ள பச்சைமுத்து கல்லூரியில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு பச்சமுத்து கல்வி குழும தலைவர் பாஸ்கர் வரவேற்புரையாற்றினார். தருமபுரி கோட்டாட்சியர் காயத்ரி, பசுமை தாயகம் தலைவர் முனைவர் சௌமியா அன்புமணி தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் குத்துவிளக்கு ஏற்றி வைத்தனர். இதே தொடர்ந்து சௌமியா அன்புமணி பள்ளி மாணவ, மாணவிகளிடம் உரையாற்றியபோது ஆண்டுதோறும் 8 லட்சத்து 50 ஆயிரம் மாணவ, மாணவிகள் 12 ஆம் வகுப்பு தேர்வு எழுதுகிறார்கள். இவர்களில் 7 லட்சத்து 50 ஆயிரத்திற்கு மேல் மாணவ ,மாணவிகள் தேர்ச்சி பெறுகின்றனர். இவர்கள் உயர்கல்வியில் சேரும் பொழுது டாக்டர், ஐஏஎஸ் ஆக வேண்டும் என்று பெரும்பாலரும் விரும்புகின்றனர். ஆனால் இந்தியாவில் ஆண்டிற்கு ஒரு லட்சத்து 25 ஆயிரம் மருத்துவ படிப்பு முடித்து மருத்துவர்கள் ஆக வெளி வருகின்றனர். ஆனால் தமிழ்நாட்டில் 1,500 மருத்துவ படிப்புகள் மட்டுமே உள்ளது. இதில் 7.5 இட ஒதுக்கீட்டில் தமிழ்நாட்டிலே தருமபுரியில் மட்டும் அதிகமானவர்கள் சேர்கின்றனர். பொறியியல் கல்லூரியில் வருடத்திற்கு ஒரு லட்சத்து 72,000 மாணவ, மாணவிகள் பட்டம் பெற்று வெளி வருகின்றனர். மேலும் அதிக அளவில் மாணவ, மாணவிகள் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயின்று வருகின்றனர். மத்திய, மாநிலஅரசுகள்மாணவ, மாணவிகளுக்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதனை மாணவ ,மாணவிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் தருமபுரி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ். பி. வெங்கடேஸ்வரன், தருமபுரி மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ஜோதி சந்திரா, பாரதியார் பல்கலைக்கழகம் தொழில் வழிகாட்டுதல் துறை தலைவர் முனைவர் விமலா, டாட்டா எலக்ட்ரானிக்ஸ் திட்ட மனித வள மேம்பாட்டு துறை அலுவலர் வெள்ளங்கிரி, பயிற்சி திட்ட உதவி இயக்குனர் முத்தமிழ்செல்வன் மற்றும் தருமபுரி மாவட்டத்தில் உள்ள அரசு பள்ளி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

மார்த்தாண்டம் அருகே

# சமையல் செய்யும்போது பெண் கருகி உயிரிழப்பு

மார்த்தாண்டம், ஜூன். 7

மார்த்தாண்டம் அருகே மஞ்சாணி விளை என்ற இடத்தை சேர்ந்தவர் மணிகண்டன் மனைவி ஐஸ்வர்யா (29). இவர் தனது வீட்டில் கேஸ் இல்லாத காரணத்தால் சமையல் செய்வதற்காக விறகு அடுப்பில் சமையல் வேலை செய்துள்ளார். அப்போது விறகுகள் ஈரமாக இருந்ததால் மர வேலைக்கு பயன்படுத்தும் டர்பன் ஆயிலை விறகின் மேல் ஊற்றி எரிக்க முயற்சித்துள்ளார். இதில் அவரது சேலை மீது டர்பன் ஆயில் கொட்டி உள்ளது. இதை தெரியாத ஐஸ்வர்யா தீயை அடுப்பில் கொளுத்திய போது, அவர் மீது தீ பற்றி எரிந்து உள்ளது. இதனால் அவருக்கு படுகாயம் ஏற்பட்டு சத்தம் போட்டு உள்ளார். அக்கம் பக்கத்தினர் உடனடியாக அவரை மீட்டு மார்த்தாண்டத்தில் உள்ளஒருதனியார்மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சைக்கு பின்னர், மேல் சிகிச்சைக்காக கேரள மாநிலம் நெய்யாற்றின் கரையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பெற்று வந்த ஐஸ்வர்யா சிகிச்சைபலனின்றிநேற்றுபரிதாபமாக உயிரிழந்தார் இது குறித்து ஐஸ்வர்யாவின் தந்தை கிருஷ்ணகுமார் என்பவர் மார்த்தாண்டம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.